செ.வெ.எண்: 104 தேதி: 02.02.2011

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தில் (தாட்கோ) காலியாக உள்ள 13 இளநிலை உதவியாளர் பணிகளுக்கு வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் பெறப்பட்டு தகுதி வாய்ந்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு உள்ளனர். இவர்கள் வேலூர், கடலூர், நாகப்பட்டினம், நாமக்கல், சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவாரூர், தஞ்சாவூர், சிவகங்கை மற்றும் கோயம்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் இளநிலை உதவியாளர் நிலையில் பணியில் அமர்த்துவதற்கான ஆணை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 02.02.2011 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கப்பட்டது.

மேலும் 2010–2011ம் ஆண்டுக்கான மாநில சிறப்பு நிதி உதவியிலிருந்து நடத்தப்படுகின்ற CAD / CAM, CAT / XAT, IIT-JEE /AIEEE மற்றும் வங்கிகளால் நடத்தப்படும் எழுத்தர் மற்றும் அலுவலர் போட்டி தேர்வுகளுக்கான பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு அதற்கான பணி ஆணை (Work Order) மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 02.02.2011 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கப்பட்டது.

மேலாண்மை இயக்குநர்,

தாட்கோ.

\\Typing\d\A1 sec\2849.doc, typing

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை -9